# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 14, விய—திருவள்ளுவர் ஆண்டு 2038

## 2007 மார்ச் 28, புதன்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"கற்றறிந்தார் கல்வி விளங்கும் கசடறச்*
*சொற்றெரிதல் வல்லார் அகத்து."*

*மாசற்ற சொற்களைத் தேர்ந்தெடுத்து உரை நிகழ்த்துவோரிடமே அவர் கற்றுத் தேர்ந்த கல்வியின் பெருமை விளங்கும்.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

## 1. சிறப்புக் கவன ஈர்ப்பு

### கோயம்புத்தூர் மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம், PRICOL தொழிற்சாலைத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் அவர்கள், கோயம்புத்தூர் மாவட்டம், பெரியநாயக்கன்பாளையத்திலுள்ள PRICOL தொழிற்சாலைத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.*

**திரு. மு. கண்ணப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், பெரியநாயக்கன்பாளையத்திலுள்ள PRICOL தொழிற்சாலையில் 1,200 பெண்கள் உட்பட 6,500 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். சில கோரிக்கைகளை முன்வைத்துக் கடந்த 24 நாட்களாக அவர்கள் வேலைநிறுத்தம் செய்து*

[திரு. மு. கண்ணப்பன்] [2007 மார்ச் 28

வருகிறார்கள். சாலை மறியல், அதையொட்டித் தொழிலாளர்கள் கைது, உண்ணாவிரதம் போன்ற போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றார்கள். இந்த வேலைநிறுத்தம் காரணமாக அந்தப் பகுதியில் ஒரு பதற்றமான சூழ்நிலை நிலவுகின்றது. ஒரு அமைதியில்லாத சூழ்நிலை ஏற்படக்கூடிய நிலைமையும் உருவாகி வருகின்றது. எனவே, அரசு தலையிட்டு, PRICOL நிர்வாகத்தினருடன் பேசி, தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகளையும், அவர்களுக்கான வேலைப் பாதுகாப்பையும் உறுதி செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையில் PRICOL நிறுவனத்திற்குச் சொந்தமான மூன்று தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. இந்தத் தொழிற்சாலைகளில் மோட்டார் வாகனங்களின் பாகங்கள் தயார் செய்யப்பட்டு வருகின்றன. இந்தத் தொழிற்சாலைகள் Plant-I, Plant-III, Plant-IV என்று அழைக்கப்படுகின்றன. மேற்கண்ட நிறுவனத்திற்கு, கோவை தவிர, அரியானா, உத்தரகாண்டம் ஆகிய மாநிலங்களிலும் மற்றும் பூனாவிலும் தொழிற்சாலைகள் உள்ளன.

Plant-I–ல் பணிபுரியும் 4 தொழிலாளர்களையும், Plant-III–ல் பணிபுரியும் 2 தொழிலாளர்களையும் நிர்வாகம் உத்தரகாண்டம் மாநிலத்திலுள்ள அவர்களது தொழிற்சாலைக்கு இட மாற்றம் செய்தது. இந்த இட மாற்றத்தை எதிர்த்து, Plant-III–ல் பணிபுரியும் தொழிலாளர்கள் 3–3–2007 முதலும், Plant-I–ல் பணிபுரியும் தொழிலாளர்கள் 5–3–2007 முதலும் வேலைநிறுத்தம் செய்து வருகின்றனர். கடந்த 9 ஆம் தேதி மாலை சுமார் 2,100 தொழிலாளர்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர். தகவல் அறிந்தவுடன், மாவட்ட நிர்வாகமும், தொழிலாளர் உதவி ஆணையரும், தொழிலாளர்கள் சாலை மறியல் செய்யும் இடத்திற்கே சென்று, சாலை மறியலை விலக்கிக்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டனர். ஆனால், தொழிலாளர்கள் சாலை மறியலை விலக்கிக்கொள்ளவில்லை. அதனால், 10–3–2007 அன்று சாலை மறியலில் ஈடுபட்ட தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டு, அன்று மாலையே விடுவிக்கப்பட்டனர்.

2007 மார்ச் 28] [திரு. தா.மோ. அன்பரசன்]

இது சம்பந்தமாக, *10–3–2007, 12–3–2007, 15–3–2007, 20–3–2007, 26–3–2007* ஆகிய நாட்களில் கோவை, தொழிலாளர் இணை ஆணையர் இரு தரப்பினரையும் அழைத்து சமரசப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். இந்தப் பேச்சுவார்த்தையின்போது, ஆறு தொழிலாளர்களின் இட மாற்ற உத்தரவை இரத்துச் செய்ய வேண்டுமென்று தொழிற்சங்கம் கேட்டது. ஆனால், அவ்வாறு இட மாற்ற உத்தரவை இரத்துச் செய்ய முடியாது என்று நிர்வாகத் தரப்பில் கூறப்பட்டது. *16–3–2007* அன்று *30* தொழிலாளர்களையும், *17–3–2007* அன்று *34* தொழிலாளர்களையும், ஆக மொத்தம் *64* தொழிலாளர்களை நிர்வாகம் நீக்கி, பகுதிக் கதவடைப்பு–lockout செய்தது.

*26–3–2007* அன்று கோவை, தொழிலாளர் இணை ஆணையர் முன்பு நடைபெற்ற சமரசப் பேச்சுவார்த்தையில் இரு தரப்பினரும், அவர்களது நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை என்று தெரிவித்தனர். ஆகவே, அடுத்த பேச்சுவார்த்தை, வருகிற *1–4–2007* அன்று நடைபெறவுள்ளது. இந்தப் பிரச்சினை சம்பந்தமாகக் கோவை மாவட்ட ஆட்சியர் மற்றும் தொழிலாளர் ஆணையர் ஆகியோருடன் அவ்வப்போது தொடர்புகொண்டு நிலைமையைக் கவனித்து வருகிறேன். இந்தப் பிரச்சினையை விரைவில் தீர்ப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கண்ணப்பன்.

முற்பகல் *9–35*

**திரு. மு. கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த *6* தொழிலாளர்களை உத்தரகாண்டம் மாநிலத்திற்கு மாற்றுவதற்கு முக்கியமான காரணம், ஏற்கெனவே *5* தொழிற்சங்கங்கள் அங்கே செயல்பட்டுக்கொண்டிருந்தன. தொழிலாளர்கள் ஒன்று கூடி, அவர்களுடைய கோரிக்கைகளுக்காக நியாயமான முறையில், கட்சி சார்பற்ற ஒரே சங்கமாக அமைத்து, ஒற்றுமையோடு அவர்கள் செயல்படுகிறார்கள்; அந்தச் சங்கத்தை நடத்துகிறார்கள். ஆகவே நியாயமான சில கோரிக்கைகளை முன்வைத்த காரணத்தினாலேதான் அந்த நிர்வாகத்தினர் பழிவாங்குகின்ற நோக்கத்தோடு இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள்.

[திரு. மு. கண்ணப்பன்] [2007 மார்ச் 28

எனவே, தொழிலாளர்கள் பழி வாங்கப்படுகின்ற போக்கைக் கைவிடுகின்ற வகையிலும், உடனடியாக அந்தத் தொழிற்சாலையைத் திறப்பதற்கும் அரசு தலையிட்டு வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு, தொழில் வளர்ச்சியும் தேவை, அதே நேரத்தில் தொழிலாளர் உரிமையும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் அக்கறைகொண்ட அரசு. வேண்டுமானால் ஆணையர் மட்டத்திலே பேசி, இந்தப் பிரச்சினையை விரைவில் தீர்க்க ஆவன செய்யும்.

## 2. அறிக்கைகள் அளித்தல்

### பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–2007 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் இருபத்து எட்டு முதல் முப்பத்து இரண்டு வரையிலான 5 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 3. வரவு–செலவுத் திட்டம், 2007–2008, பொது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007–2008 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம்—தொடர்ச்சி. மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதின்மூன்றாவது சட்டப் பேரவையின் ஐந்தாவது கூட்டத் தொடரில் 2007–2008 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே பேசுவதற்கான ஒரு வசந்த வாய்ப்பினை எனக்கு வழங்கிய, அன்னைத் தமிழ்நாட்டை ஆளப் பிறந்த இன்பத் தமிழ்நாட்டின் எதிர்கால முதலமைச்சர், (மேசையைத் தட்டும் ஒலி)